# இஸ்ரேலில் நிர்மாணத்துறை வேலைகளுக்காக
# வேலை வெற்றிடங்களின் அறிவிப்பு
## (உட்கட்டமைப்பு உப பிரிவு)

அரசு, அரசுக்கு இடையிலான உடன்படிக்கையின் கீழ், இஸ்ரேலில் உடனடி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் வேலைப் பிரிவுகளுக்காக தகுதியுடைய தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**தொழிலாளர்கள் வழக்கமாக மாறக்கூடிய காலநிலை சூழல்களில் வெளிப்புற இடங்களில் வேலை மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு கண்டிப்பான பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை பின்பற்றல் வேண்டும். கனரக பொருட்கள் மற்றும் கருவிகளுடன் வேலையில் ஈடுபடல் வேண்டும் என்பதால் இந்த வேலைகளுக்கு உடல் ரீதியான தகைமையும் இருத்தல் வேண்டும்.**

| தொழில்முறை | எதிர்பார்க்கப்படும் நிலைகளின் எண். | தேவையான சிறப்பு தகைமைகள் |
|---|---|---|
| உருக்கிணைப்பவர்<br><br>Welders | 600 | உருக்கிணைப்பில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம் மற்றும் உருக்கு அல்லது இரும்பு கூறுகளில் சட்டகம், கிடைமட்ட, செங்குத்து, மேல் நிலை உருக்கிணைப்பு.<br><br>வரைபடங்களை வாசிக்கும் அறிவு மற்றும் அவசியமான கருவிகள்/ உபகரணங்களுடனான பரீட்சயம்.<br><br>பாதுகாப்பான வேலைக்கு தேவையான உபகரணங்கள் உட்பட இந்த வேலையை மேற்கொள்வதில் தேவையான பாதுகாப்பு விதிகளின் அறிவு<br><br>சான்றளிப்பு சான்றிதழ்: MIG உருக்கிணைப்பு/ Ferro சான்றிதழ்/ FCAW சான்றிதழ் |
| நீண்ட மின்சாரம்/ தொடர்பாடல் உட்கட்டமைப்பு அடுக்குகள்<br><br>Longitudinal electrical/ communication infrastructure layers | 650 | நீண்ட மின்சாரம்/ தொடர்பாடல் உட்கட்டமைப்புகளை பதித்தலில் இரண்டு ஆண்டுகள் அனுபவம்.<br><br>நீண்ட மின்சாரம்/ தொடர்பாடல் உட்கட்டமைப்புகளை பதித்தலுக்கான வரைபடங்களை வாசிக்கும் அறிவு<br><br>நீளங்கள்/ தூரங்கள், விட்டங்கள் மற்றும் சாய்வுகளை அளப்பதன் அறிவு.<br><br>இந்த வேலையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதன் அறிவு.<br><br>நீண்ட மின்சாரம்/ தொடர்பாடல் உட்கட்டமைப்புகளை தோண்டல் மற்றும் பதித்தலின் அறிவு. |
| நீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்பு அடுக்குகள்.:. இணைப்புகள்<br><br>Water and Sewerage Infrastructure Layers/ Connectors | 650 | நீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்புகளில் இரண்டு ஆண்டுகள் அனுபவம்<br><br>நீர் உட்கட்டமைப்பு ஒன்றை பதித்தல்/ இணைப்புக்கான வரைவு ஒன்றை வாசித்தல்<br><br>நீளங்கள்/ தூரங்கள், விட்டங்கள் மற்றும் சாய்வுகளை அளப்பதன் அறிவு<br><br>இந்த வேலையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதன் அறிவு.<br><br>நீர் உட்கட்டமைப்பு/ குழாய்களை பதிப்பதற்கு தோண்டும் அறிவு |
| இயந்திரம் மற்றும் கனரக உபகரணங்களை இயக்குபவர்கள் | 300 | வீதி கட்டமைப்பு மற்றும் அகழ்வின் மண், Compaction இனை அகற்றுவதற்கான பல்வேறு இயந்திரங்களை செயற்படுத்துபவர்கள் |
| கற்சுவர் மற்றும் இணைப்புக் கல் அடுக்குகள்<br><br>Curbstone and interlocking stone layers | PIBA வினால் தீர்மானிக் கப்படும் | கற்சுவர் மற்றும் இணைப்புக் கல் பதித்தலில் இரண்டு ஆண்டுகள் அனுபவம்<br><br>கற்சுவர் மற்றும் இணைப்புக் கல் பதித்தலுக்கான வரைபடம் ஒன்றை வாசித்தல்<br><br>உயர் கோடுகள் மற்றும் சாய்வுகளை வரைதல் உட்பட இடம் மற்றும் சாய்வுகளை தயார்பத்தல்<br><br>இந்த வேலையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதன் அறிவு. |

**<u>முன் தேவைகள்</u>**

1. 25 வயது – 45 வயதுக்கு இடையே இருத்தல் வேண்டும்.
2. செல்லுபடியான கடவுச்சீட்டுடன் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
3. இஸ்ரேலில் பெற்றோர்கள்/ மனைவி அல்லது பிள்ளைகள் பணியாற்றுவது அல்லது வசிக்காமல் இருத்தல்.
4. உயர்ந்த மற்றும் அதிக எடையை தூக்குவது உட்பட நிர்மாணத் துறையில் இஸ்ரேலின் காலநிலை சூழல்களில் வெளிப்புறத்தில் வேலைகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல்.
5. விண்ணப்பதாரர்கள் நோய்கள் அல்லது நாட்பட்ட மருத்துவ நிலைகளால் பாதிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் (காசநோய், ஈரல் அழற்சி, மற்றும் கோனோரையா, எயிட்ஸ் அல்லது மனநோய்).
6. குற்றம் புரியாதவர் என்பதை நிரூபிக்கும் இலங்கை பொலிஸ் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு போதைப்பொருள் அல்லது மதுபானம் தொடர்பான குற்றங்களில் ஈடுபடாதிருத்தல் வேண்டும். 6 மாதங்களுக்கு மேல் ஏதாவது நாட்டில் வேலை பார்த்திருந்தால் தொடர்புடைய நாட்டில் இருந்து பொலிஸ் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விண்ணப்பதாரர் 10 வருடங்கள் பாடசாலையை முடித்திருத்தல் வேண்டும்.
8. ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும்.
9. இயந்திரன் மற்றும் கனரக உபகரணங்களை இயக்குபவர்கள் தவிர்த்து உட்கட்டமைப்பு தொடர்பான பிரிவில் இரண்டு ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.
10. தேர்வு செய்யப்படும் அபேட்சகர்கள் இஸ்ரேல் நிர்வாகத்தினால் கோரப்படும் இஸ்ரேலுக்கு பிரவேசிப்பதற்கு மற்றும் தங்கி இருப்பதற்கு தேவையான அனைத்து மருத்துவ மற்றும் மற்ற தேவைகளை மேற்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.
11. தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் தற்காலி வேலை ஒன்று தவிர்த்து இஸ்ரேலில் சட்டவிரோதமாக தங்கி இருக்காதவராக இருத்தல் வேண்டும்.
12. வேலை விசா அதிகபட்சம் 5 ஆண்டுகள் வரை ஒரு நேரத்தில் வழக்கமாக ஓர் ஆண்டுக்கு நீடிக்கலாம்.
13. SLBFE உடன் ஒருங்கிணைக்கப்பட்டு PIBA மூலம் கோரப்படுவதற்கு அமைய வேறு ஏதேனும் தொடர்புடைய அளவுகோலுடன் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
14. ஊழியர்கள் இஸ்ரேலிய தேர்வாளர்களால் தொழில்முறை பரீட்சை ஒன்றில் சோதிக்கப்படும் என்பதோடு தொழில்முறை சோதனை தேர்வுக்காக SLBFE நேர்முகப்பரீட்சை மற்றும் முன் சோதனையை மேற்கொள்ளும்.
15. பதவிக்கான தமது பொருத்தத்தை சோதிப்பதற்கு ஊழியர்கள் இஸ்ரேலிய தேர்வாளர்களால் தொழில்முறை பரீட்சை ஒன்றில் சோதனை மேற்கொள்ளப்படும். PIBA மூலம் மதிப்பிப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை 2200 என்பதோடு தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் இறுதித் தரவுத்தளத்தில் இருந்து இஸ்ரேலினால் (சீட்டிழுப்பு) எழுமாறாக தேர்வு செய்யப்படுவர்.
16. அட்சேர்ப்பு நடைமுறையின் எந்த ஒரு கட்டத்திலும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து தேர்வு செய்யப்பட்டதற்கு ஆட்சேர்ப்புக் கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை. தேர்வுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் SLBFE இற்கு பதிவு கட்டணம், செயற்படுத்தல் கட்டணம் மற்றும் விமான டிக்கெட் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும்.
17. சட்டவிரோதமாக மேலதிக கட்டணங்களை கோருவது தொடர்பில் ஏதோனும் விசாரணை அல்லது முறைப்பாடு இருந்தால் **israel_construction@slbfe.lk** என்ற முகவரிக்கு எழுத்தில் அறியத்தர முடியும்.

**அங்கீகரிக்கப்பட்ட குறைப்புகள் மற்றும் வரிகளுக்கு முன்னர் தொழிலாளரின் மதிப்பிடப்பட்ட மொத்த சம்பளம் வேலையின் ஒவ்வொரு முழு மாதத்திற்காகவும் 6,247,67 NIS ஆகும் (இந்த எண்ணிக்கை முழு நேர ஊழியருக்கான இஸ்ரேலிய நிர்மாணத் துறையில் தற்போதைய குறைந்தபட்ச மாதாந்த சம்பளத்தின்படியாகும்.)**

மேல் குறிப்பிடப்பட்ட தொடர்புடைய முன் தகைமையை விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதோடு 2025.08.06 ஆம் திகதி தொடக்கம் SLBFE இன் உத்தியோகபூர் இணையதளத்தில் ஒன்லைன் வழியாக பதிவு செய்யலாம்.

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்.

54 x 5